**செய்தி வெளியீடு எண் : 125** **நாள் : 18.01.2024**

# <u>செய்தி வெளியீடு</u>

## "ஸ்டார்ட் அப் இந்தியா" வெளியிட்ட தரவரிசைப்பட்டியலில் சிறந்த புத்தொழில் சூழமைவினை (Startup Ecosystem) கட்டமைக்கும் மாநிலங்களில் முதல் தரவரிசைப் பிரிவில் இடம்பெற்றது தமிழ்நாடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் முதல் பிரிவிற்கான சான்றிதழ் காண்பித்து வாழ்த்து.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் சந்தித்து, ஒன்றிய அரசின் "ஸ்டார்ட் அப் இந்தியா" வெளியிட்ட 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசைப்பட்டியலில் சிறந்த புத்தொழில் சூழமைவினை (Startup Ecosystem) கட்டமைக்கும் மாநிலங்களில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட முதல் தரவரிசை பிரிவிற்கான "Best Performer" சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி, தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதி, வளர்ந்து வரும் துறைகளுக்கான ஆதார நிதி, புத்தாக்க பற்றுச் சீட்டுத்திட்டம் ஆகிய நிதித்திட்டங்களை செயல்படுத்துதல், தொழில் வளர் காப்பகங்களை சிறப்பாக ஒருங்கிணைப்பதன் மூலம் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுதல், பசுமைத்தொழில்நுட்பம், ஊரக வாழ்வாதார மேம்பாடு ஆகியவை சார்ந்து இயங்கும் மற்றும் பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்புத்திட்டங்களை செயல்படுத்துதல், ஆகியவை தமிழ்நாட்டின் மிக சிறப்பான புத்தாக்க செயல்பாடுகளாக ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ஜனவரி 16 ஆம் தேதி அன்று ஒன்றிய அரசின் "ஸ்டார்ட் அப் இந்தியா" வெளியிட்ட சிறந்த புத்தொழில் சூழமைவினை (Startup Ecosystem) கட்டமைக்கும் மாநிலங்களின், 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசைப்பட்டியலில், முதல் தரவரிசை பிரிவான "சிறந்த செயல்பாட்டாளர் (Best Performer)" சான்றிதழை தமிழ்நாடு பெற்றுள்ளது.

இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்க இயக்குநர் திரு.சிவராஜா ராமநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in